தினகரன்
மார்ச் 19, 2024 செவ்வாய்க்கிழமை

## அதிநவீன இயந்திரம் மூலம்

# ரத்தநாள நோய்களுக்கு சிகிச்சை பெற ஜிப்மரில் தனிப்பிரிவு துவக்கம்

புதுச்சேரி, மார்ச் 19: ஜிப்மர் மருத்துவமனையின் சூப்பர் ஸ்பெஷாலிட்டி பிளாக் இணைப்பு கட்டிடத்தில் ரூ. 11 கோடியில் டிஎஸ்ஏ என்ற இயந்திரம் கடந்த ஏப்ரல் மாதம் நிறுவப்பட்டது. இந்த இயந்திரம் ரத்த நாளங்களை மிக துல்லியமாக கண்டறியும திறன் கொண்டது.

இது 3 டி சுழற்சி, ஆஞ்சியோ கிராபி, ரத்த ஓட்ட மதிப்பீடு, டைனா சிடி கண்டறிதல் போன்ற பல மேம்பட்ட அம்சங்கள் மற்றும் மென்பொருள் இயக்கங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது. ரத்த நாளங்களை பாதிக்கும் பல்வேறு நோய்களை கண்டறிவதற்கு இது பயனுள்ளதாக இருக்கும். சிறு துளை முறைகளை பயன்படுத்தி பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்க முடியும். இதில் குழாய் மூலம் சிறிய துளை வழியாக ரத்த நாளத்துக்குள் செலுத்தி, மூளையின் ரத்த நாளங்கள் உட்பட உடலின் பல்வேறு இடங்களில் உள்ள ரத்த நாளங்களுக்கு சிகிச்சையளிக்க முடியும்.

ரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்புகள், அவற்றின் குறுகலை நீக்குதல், பலவீனமான ரத்த நாள சுவரில் வீக்கம், ரத்த நாளங்களுக்கு இடையே அசாதாரண இணைப்புகளை மூடுதல், சேதமடைந்த ரத்த குழாயில் இருந்து ரத்த போக்கினை நிறுத்தும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும். அறுவை சிகிச்சைக்கு முன் ரத்த விநியோகத்தை தடுக்கவும் பயன்படும். இந்த இயந்திரத்தை பயன்படுத்தி, நரம்பு குழாய் பிரச்னைகளில் குறுகலான கழுத்து தமனிகளில் ஸ்டென்டிங், முதுகெலும்பு மற்றும் முதுகு தண்டு பிரச்னைகள் உள்ளிட்ட ரத்த நாளங்கள் சம்மந்தப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்கான சிறப்பு வெளிநோயாளிகள் சிகிச்சை பிரிவை ஜிப்மர் துவங்கியுள்ளது. இது ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை செயல்படும் என ஜிபம்ர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.